**சுருக்கம்**

பொதுப் பணிகள் – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை – கிராம நிருவாகம் – தமிழ்நாடு வருவாய்த் துறையில் பணிபுரிந்து வரும் கிராம உதவியாளர்களுக்கு தகுதி அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராகப் பதவி உயர்வு வழங்கியது – அருகருகே உள்ள மாவட்டங்களை ஒருங்கிணைத்து மண்டலங்களாக உருவாக்கியது – புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களை அந்தந்த மண்டங்களில் சேர்த்து திருத்திய மண்டலங்களை உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பணிகள் அலகு, [பணி.8(1)] பிரிவு**

**அரசாணை (நிலை) எண்.496**

**நாள் 04.08.2021,**
**பிலவ வருடம், ஆடி 19,**
**திருவள்ளுவராண்டு 2052,**

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண்.570, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 26.12.2014.
2. அரசாணை (நிலை) எண்.456, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 16.11.2018.
3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ந.க.பணி.5(4)/36315/2017, நாள் 12.04.2021.

-------

**ஆணை:-**

2018–19–ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்,

"அரசாணை (நிலை) எண்.570, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [பணி.8(1)]த் துறை, நாள் 26.12.2014–இன்படி தகுதியுள்ள கிராம உதவியாளர்களுக்கு கிராம நிருவாக அலுவலர்களாக பதவி உயர்வு வழங்குவது தொடர்பான நேர்வில், ஒரு சில மாவட்டங்களில் கிராம உதவியாளர்களைக் கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்ப நிர்ணயம் செய்யப்பட்ட பணியிடங்கள் காலியாகவும் சில மாவட்டங்களில் தகுதியுள்ள கிராம உதவியாளர்கள் பதவி உயர்வு பெற காலி பணியிடம் இன்றியும் உள்ள நிலை உள்ளது. இந்நேர்வுகளில், அருகருகே உள்ள மாவட்டங்களை மண்டலங்களாக ஒருங்கிணைத்து அந்தந்த மண்டலங்களில் உள்ள மாவட்டங்களில், தகுதியுள்ள கிராம உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட பின்னரும் காலியாக உள்ள பணியிடங்களில் 30 சதவீதம் பணியிடங்களை, அந்த மண்டலங்களில் உள்ள பிற மாவட்டங்களில் பதவி உயர்வுக்காகக் காத்திருக்கும் தகுதியுள்ள கிராம உதவியாளர்களைக் கொண்டு நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்படும்"

என அறிவித்ததைத் தொடர்ந்து, அருகருகே உள்ள மாவட்டங்களை மண்டலங்களாக ஒருங்கிணைத்து அந்தந்த மண்டலங்களில் உள்ள மாவட்டங்களில் தகுதி வாய்ந்த கிராம உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட பின்னரும், காலியாக உள்ள பணியிடங்களில் 30% (சதவீதம்) பணியிடங்களை, (30% of the unfilled vacancies in the 20% reservation for promotees) அந்தந்த மண்டலங்களில் உள்ள பிற மாவட்டங்களில் பதவி உயர்வுக்காக காத்திருக்கும் தகுதி வாய்ந்த கிராம உதவியாளர்களைக் கொண்டு நிரப்பிட ஏதுவாக ஒன்பது மண்டலங்களை அமைத்து பார்வை 2–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில், ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது காஞ்சிபுரம் / செங்கல்பட்டு எனவும், ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டம், தற்போது, விழுப்புரம் / கள்ளக்குறிச்சி எனவும், ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம், தற்போது வேலூர்/ இராணிப்பேட்டை/ திருப்பத்தூர் எனவும், ஒருங்கிணைந்த நாகப்பட்டிணம் மாவட்டம், தற்போது நாகப்பட்டிணம்/ மயிலாடுதுறை எனவும், மற்றும் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம், தற்போது திருநெல்வேலி/ தென்காசி எனவும், புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

3. மாவட்ட பிரிவினைகளுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட புதிய மாவட்டங்களை அந்தந்த மண்டலங்களில் சேர்த்து, உரிய ஆணைகள் வழங்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மேலே பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கோரியுள்ளார்.

4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, புதியதாக உருவாக்கப்பட்ட செங்கற்பட்டு மாவட்டத்தை மண்டலம் 1–இலும், கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களை மண்டலம் 2–இலும், மயிலாடுதுறை மாவட்டத்தை மண்டலம் 3–இலும் மற்றும் தென்காசி மாவட்டத்தை மண்டலம் 8–இலும் சேர்த்து கீழ்க்கண்டவாறு திருத்திய மண்டலங்களை உருவாக்கியும், எஞ்சிய மண்டலங்கள் மாற்றம் ஏதுமின்றி அரசாணை (நிலை) எண்.456, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 16.11.2018–இல் உள்ளவாறு செயல்பட அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது:–

| **மண்டலங்களின் வரிசை எண்** | **அரசாணை (நிலை) எண்.456, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 16.11.2018–இன்படி உருவாக்கப்பட்ட மண்டலங்கள்** | **புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள்** | **மாவட்ட பிரிவினைக்குப் பின்னர் உருவாக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட மண்டலங்கள்** |
|---|---|---|---|
| மண்டலம்–1 | சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம். | செங்கற்பட்டு | சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கற்பட்டு. |
| மண்டலம்–2 | கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர். | கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் | கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர். |
| மண்டலம்–3 | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம். | மயிலாடுதுறை | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை. |

| | | | |
|---|---|---|---|
| மண்டலம்–4 | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், கரூர். | – | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், கரூர். |
| மண்டலம்–5 | ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி. | – | ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி. |
| மண்டலம்–6 | திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர். | – | திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர். |
| மண்டலம்–7 | இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை. | – | இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை. |
| மண்டலம்–8 | தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி. | தென்காசி | தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி. |
| மண்டலம்–9 | சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி. | – | சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி. |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**குமார் ஜயந்த்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**<u>பெறுநர்:</u>**
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,
தேர்வாணையச் சாலை, சென்னை–03.
**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–09.
மாண்புமிகு அமைச்சர் [வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை]
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–09.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–09.
நிதித்துறை, சென்னை–09.
தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை–09.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பணி.7/வ.நி.3)த் துறை, சென்னை–09.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**